# ஏப்ரல்- 06 - வெள்ளி

**புனித செலஸ்தின்**

**"இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை"**
**(தி.ப. 4:12)**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணிகள்4: 1 – 12

அக்காலத்தில் பேதுருவும் யோவானும் மக்களோடு பேசிக்கொண்டிருந்தனர். அப்போது குருக்களும் சதுசேயர்களும் கோவில் காவல் தலைவரும் அங்கு வந்தார்கள். அவர்கள் மக்களுக்குக் கற்பிப்பதையும் இறந்தோர் இயேசுவின் மூலம் உயிர்த்தெழுவர் என்று அறிவித்ததையும் கண்டு எரிச்சலடைந்து, அவர்களைக் கைது செய்தார்கள் ஏற்கனவே மாலையாகி விட்டதால் மறுநாள்வரை காவலில் வைத்தார்கள். அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்ட பலரும் நம்பிக்கை கொண்டனர். இவ்வாறு நம்பிக்கை கொண்ட ஆண்களது எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம். மறுநாள் தலைவர்களும் மூப்பர்களும் மறைநூல் அறிஞர்களும் எருசலேமில் ஒன்று கூடினார்கள். அவர்களுடன் தலைமைக் குருவான அன்னாவும், கயபா, யோவான், அலக்சாந்தர் ஆகியோரும், தலைமைக் குருவின் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் கூடியிருந்தார்கள். அவர்கள் திருத்தூதர்களை நடுவில் நிறுத்தி, "நீங்கள் எந்த வல்லமையால், அல்லது எந்தப் பெயரால் இதனைச் செய்தீர்கள்?" என்று வினவினார்கள். அப்பொழுது பேதுரு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவர்களுக்கு மறுமொழியாகக் கூறியது "மக்கள் தலைவர்களே, மூப்பர்களே, உடல் நலமற்றியிருந்த இவருக்கு நாங்கள் செய்த நற்செயல் எப்படி நிகழ்ந்தது என்பதைக் குறித்து நாங்கள் இன்று விசாரணை செய்யப்படுகிறோம். நாசரேத்து இயேசுவின் பெயரால் இவர் நலமடைந்து நம்முடன் நிற்கிறார். இது உங்கள் எல்லாருக்கும், இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கட்டும். நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார். இந்த இயேசுவே, "கட்டுகிறவர்களாகிய உங்களால் இகழ்ந்து தள்ளப்பட்ட கல். ஆனாலும் முதன்மையான மூலைக்கல்லாக விளங்குகிறார்." இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின்கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை.

**பதில்பாடல் :** கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்தின்
மூலைக்கல் ஆயிற்று.

## நற்செய்தி : யோவான்21 : 1 – 14

அக்காலத்தில் இயேசு தம் சீடருக்குத் திபேரியக் கடல் அருகே மீண்டும் தோன்றினார். அவர் தோன்றியது இவ்வாறு. சீமோன் பேதுரு, திதிம் எனப்படும் தோமா, கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நத்தனியேல், செபதேயுவின் மக்கள் ஆகியோரோடு இயேசுவின் சீடர்களுள் வேறு இருவரும் கூடியிருந்தனர்,அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம், "நான் மீன்பிடிக்கப் போகிறேன்" என்றார். அவர்கள், "நாங்களும் உம்மோடு வருகிறோம்" என்று போய்ப் படகில் ஏறினார்கள். அன்று இரவு அவர்களுக்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை. ஏற்கெனவே விடியற்காலை ஆகியிருந்தது. இயேசு கரையில் நின்றார். ஆனால் அவர் இயேசு என்று சீடர்கள் அறிந்து கொள்ளவில்லை. இயேசு அவர்களிடம், "பிள்ளைகளே! மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "இல்லை" என்றார்கள்.அவர், "படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் மீன் கிடைக்கும்" என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்படட்டதால் அவர்களால் வலையை இழுக்க முடியவில்லை.இயேசுவின் அன்புச் சீடர் அதைக் கண்டு பேதுருவிடம், "அங்கு நிற்பவர் ஆண்டவர்தாம்" என்றார். அதைக் கேட்டவுடன் தம் ஆடையைக் களைந்திருந்த சீமோன் பேதுரு ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார்.மற்றச் சீடர்கள் மீன்களுடன் வலையை இழுத்துக்கொண்டு படகிலேயே வந்தார்கள். அவர்கள் கரையிலிருந்து வெகு தொலையில் இல்லை ஏறக்குறைய நூறு மீட்டர் தொலையில்தான் இருந்தார்கள். படகைவிட்டு இறங்கியவுடன் கரியினால் தீ மூட்டியிருப்பதையும் அதன்மீது மீன் வைத்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அங்கு அப்பமும் இருந்தது.இயேசு அவர்களிடம், "நீங்கள் இப்போது பிடித்தவற்றில் சில மீன்களைக் கொண்டு வாருங்கள்" என்றார்.சீமோன் பேதுரு படகில் ஏறி, வலையைக் கரைக்கு இழுத்தார். வலை நிறைய பெரிய மீன்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை நூற்று ஐம்பத்து மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை.இயேசு அவர்களிடம், "உணவருந்த வாருங்கள்" என்றார். சீடர்களுள் எவரும், "நீர் யார்?" என்று இயேசுவிடம் கேட்கத் துணியவில்லை. ஏனெனில், அவர் ஆண்டவர் தாம் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள்.இயேசு அவர்கள் அருகில் வந்து, அப்பத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தார் மீனையும் அவ்வாறே கொடுத்தார்.இவ்வாறு, இயேசு இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு தம் சீடருக்கு இப்போது மூன்றாம் முறையாகத் தோன்றினார்.

**தியானம்:** இயேசுக்கிறிஸ்துவின் உடனிருப்பும் அவரின் பிரசன்னமும்தான், ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டு வரமுடியும். இயேசுவின பிரசன்னத்தில் வாழும் பொழுது தான் துன்பங்கள் இன்பமாக மாறும். மகிழ்ச்சியும், மனநிறைவும் பெருகும். திருச்சபையின் வரலாறு, புனிதர்களிகளின் வரலாறு இதைத்தான் எமக்கு காட்டுகின்றன. இன்றைய நற்செய்தியில் வரும் திபேரியாக்கடலருகில் இயேசு சீடர்களுக்கு தோன்றுகின்ற நிகழ்வு சீடர்களின் வாழ்வில் இனி நடக்கவிருக்கும் நிகழ்வுகளுக்கு ஒரு முன்னடையாளமாக இருக்கின்றது எனலாம். உயிர்த்த இயேசுவின் உடனிருப்பை உணர்ந்துகொண்டு அவரது வழிகாட்டுதலில் செயல்பட வேண்டியது அவசியம். இதைத்தான் "இஸ்ராயேலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை" ( தி.ப. 4:12) என்ற பதம் குறிப்பிடுகின்றது. இயேசுவின் வழிகாட்டுதலில் ஏராளமான மீன்கள் அவர்களுக்கு கிடைத்தது. இயேசு எல்லா வேளைகளிலும் அவர்களோடு இருக்கின்றார். இயேசுவைப் பிரிந்து சீடர்களால் ஒன்றும் செய்ய இயலாது. இறைமகன் இயேசுவைப் பின்பற்றும் நாமும் உயிர்த்த இயேசுவின் உடனிருப்பை உணரவேண்டும். அப்போதுதான் அவரது உண்மைச் சீடர்களாக வாழ்வோம். மகிழ்ச்சியும் மனநிறைவும் பெருகும்.!